4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**MCOP No.03/2025** **நாள்: 19.02.2026** ம.சா.2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சங்கரபாண்டியன் | தொழில் | : | தனியார் வேலை |
| த/பெ | : | சந்திரன் | கிராமம் | : | உடுமலைப்பேட்டை |
| வயது | : | 40 | தாலுகா | : | உடுமலைப்பேட்டை |
| | | | மாவட்டம் | : | திருப்பூர் |

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,**

**முதல் விசாரணை -**

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பில் 2வது சாட்சி ஆவேன். இந்த வழக்கில் எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை பதிவு செய்து கொள்ள வேண்டுகிறேன்.

**3வது எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை. விபத்து குற்ற வழக்கில் என்னை சாட்சியாக சாட்சி பட்டியலில் சாட்சியாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த தேதி எனக்கு ஞாபகம் இல்லை 2017 காலை 7.30 மணிக்கு நடந்தது. இறந்து போனவருக்கு விபத்து சமயத்தில் 70 வயது இருக்கும். வயதான காரணத்தினால் இறந்து போனவர் சாலையில் நடுபகுதியில் தள்ளாடி நடந்ததால் விபத்து என்றால் சரியல்ல. பேருந்து விபத்தை ஏற்படுத்தும் போது நான் முன்னால் தான் இருந்தேன்.

என்னை தாண்டி செல்லும் போது விபத்து ஏற்படவில்லை. இறந்து போன வெள்ளைச்சாமிக்கு வாரிசுகள் யாரும் இல்லை மனுதாரர்கள் 2ம் நிலை வாரிசுகள் என்றால் சரிதான். 2ம் நிலை வாரிசுதாரர்களுக்கு 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு செலுத்த கடமைபட்டவர் என்றால் சரியல்ல. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை, வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் எனக்கு தெரிந்தவர் என்பதால் அவர்களுக்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.02.19 17:43:26 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.